**செய்தி வெளியீடு**

**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.128** **நாள் : 30.08.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தேனாம்பேட்டை மண்டலத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணவு முகாம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக டெங்கு காய்ச்சல் தடுப்பு குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பள்ளி, கல்லூரிகள், தொழிற் நிறுவனங்கள். குடிசைப்பகுதிகள், வணிக வளாகங்கள் மற்றும் பொதுமக்கள் பெருவாரியாக கூடும் இடங்களில் மாநகராட்சி ஆணையர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து விழிப்புணர்வு நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, இன்று (30.08.2019) தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட தூளைமேடு நெடுஞ்சாலையில் உள்ள ஜெய்கோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இதில் 1,550 மாணவியர்கள் மற்றும் 65 ஆசிரியர்கள் பங்குபெற்றனர். இம்முகாமில், டெங்கு காய்ச்சல் பரப்ப காரணமாக இருக்கும் ஏடிஸ் வகை கொசுவின் வாழ்க்கை சுழற்சி, உருவாகும் விதம், பரப்பும் நோய்கள் மற்றும் அதன் அறிகுறிகள் குறித்து விளக்கப்பட்டன. வீட்டிலும், அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள டயர், தேங்காய் சிரட்டைகள், உடைந்த குடங்கள், உபயோகமற்ற பொருட்கள் முதலியவற்றில் தண்ணீர் தேங்கி கொசுப்புழு உருவாகும் வாய்ப்புள்ளதால், அதனை உடன் அகற்றுமாறு கூறப்பட்டது.

மேலும், எவ்வகை காய்ச்சல் ஏற்பட்டாலும் உடன் மாநகராட்சி அல்லது அரசு மருத்துவமனையை அணுகி சிகிச்சை பெறுமாறும், மருத்துவர் பரிந்துரைத்த மருந்துச்சீட்டு இல்லாமல் நேரடியாக எந்த மாத்திரையும் உபயோகப்படுத்த வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டது. கொசுவின் பருவங்களான கொசுப்புழு, கூட்டுப்புழு, வளர்ந்த கொசுக்கள் மற்றும் கொசு உற்பத்தி ஏதுவாக உள்ள உற்பத்தி பொருட்கள் முதலியன கண்காட்சியில் வைத்து மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. இறுதியில், அனைவரும் டெங்கு காய்ச்சல் தடுப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் T.G.சீனிவாசன், எக்ஸ்நோரா தலைவர் கோவிந்தராஜ் மற்றும் தலைமையாசிரியை A.S.எழிலரசி சுகாதார ஆய்வாளர் D. கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி**